VOL. 11 | SPECIAL ISSUE 1 | OCTOBER 2023
P-ISSN: 2321-788X | E-ISSN: 2582-0397

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer - Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

கருத்தரங்கத் தலைப்பு

## மானுட மேம்பாட்டுச் சிந்தனைகளும் தமிழ் இலக்கியங்களும்



சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி)
திருநெல்வேலி - 7
(தேசிய தரமதிப்பீட்டில் A+ தகுதி பெற்றது)
தமிழ்த்துறை ஆய்வுமையம்

மற்றும்

சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## மானுடம் '23'

தொகுதி - III

ஒருங்கிணைப்பாளர்

முனைவர் இ.அன்னத்தாய் | முனைவர் வ.சில்வியா ஜெனார்த்தனம்
முனைவர் ஞா.அந்தோணி சுரேஷ்

ISSN PKP OJS SHANLAX Journals

13 Humanistic Thoughts in Journals
**Dr T. Musthafa** 52

13 ஐவகை நிலக்களமும் கருத்தாக்கமும்
**முனைவர் அ. அமல்ராஜன்** 55

14 செம்மீன் நாவலில் மானுடம்
**முனைவர் செ. தேன்மொழி** 59

15 குறள் காட்டும் மானுட மாண்புகள்
**முனைவர் ம. ஜஸ்டின் பியுலா** 63

16 தற்கால தமிழ் மரபுக் கவிதைகளில் மானுடம்
**முனைவர் மா.தே. அருண் மொழி நங்கை** 68

17 மானுட நோக்கில் விருந்தோம்பல்
**முனைவர் வ. ஆன்றனி பிரகாஷ் பபிலா** 75

18 இருளர் மக்களும் இசைக்கருவிகளும்
**முனைவர் ஜோஸ் இ கபின்** 79

19 மானுடப் பண்பாட்டு நோக்கில் சங்க காலப் பெண்களின் களவு வாழ்க்கை
**முனைவர் ஹ. அல் தாஜ் பேகம்** 82

# தற்கால தமிழ் மரபுக் கவிதைகளில் மானுடம்

*முனைவர் மா.தே. அருள் மொழி நங்கை*
ஹோலி கிராஸ் கல்லூரி, நாகர்கோவில்

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.10042865

## *முன்னுரை*

*பாரதியார் கவிதை எழுத தொடங்கிய காலம் முதல் தற்கால தமிழ் மரபுக் கவிதைகளின் வயது ஏறக்குறைய 70 ஆண்டுகள். பாரதியார், பாரதிதாசன் ,கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் ராமலிங்கப்பிள்ளை, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், முடியரசன், சுரதா, அழ. வள்ளியப்பா, கண்ணதாசன் இவர்களின் கவிதைகளில் இருந்து மானுடம் பற்றிய சிந்தனைகள் எடுக்கப்பட்டுள்ளன. கவிஞர்கள் யாவரும் தத்தம் காலகட்டத்திற்கு ஏற்ப சில கருத்துக்களில் மாற்றம் உடையவர்கள் ஆயினும் மானுடம் தொடர்பான சில குறிப்பிட்ட கருத்துக்களைக் கூறுவதில் இக்கவிஞர்கள் சிறப்புற்று விளங்குகின்றனர். ஆகையால் இவர்களின் சிந்தனையோடு கட்டுரையை எழுதலாம் என்று எண்ணுகின்றேன். இந்திய விடுதலைப் போராட்டம் தொடங்கிய நாளிலிருந்து மக்கள் ஒற்றுமை உணர்வும் மானுடமும் மேலோங்கியது. இதற்கு இலக்கியமும் வழிவகுத்தது என்பது கண்கூடான உண்மை. இந்திய விடுதலைப் போராட்டம் இலக்கியத்திலும் சிறப்பிடம் பெற்ற கால கட்டத்தில் மலர்ந்தவை. அக்கால கட்டத்தில் பாரதியின் தேசிய கீதங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு முக்கிய பங்களித்துள்ளன.*

## நாடும் மொழியும்

ஒவ்வொருவருக்கும் தன்னுடைய நாடும் மொழியும் மிகவும் முக்கியமானதாகும். அவ்வகையில் விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் பாரதியின் பாடல்கள் நாட்டிற்காகவும் மொழிக்காகவும் எவ்வளவு உதவி இருக்கின்றன என்பதை அறியலாம்.

**"வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநில தாயை வணங்குதும் என்போம்"**
**(தே.கீ.1-2)**

**"என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்"**
**(எங்கள் தாய்)**

**"தாயின் மணிக்கொடி பாரீர்" (தாயின் மணிக்கொடி)**

என்று நாட்டை தாயாக உருவகப்படுத்தி அத்தாயிடம் மிகுந்த பற்றை வளர்க்க உதவியவர் பாரதியார்.

**"மன்னும் இமயமலை எங்கள் மலையே"** *(எங்கள் நாடு)* என்ற கவிதையில் நாடு பற்றிய உணர்வும் நாடு பற்றிய மானுடமும் போட்டியிட்டு சிறக்கின்றன. பாரத நாடு, பாரத தேசம்,எங்கள் நாடு, பாரதமாதா, பாரத சமுதாயம் என்று பாரதத்தை பலபட கூறும் பாரதியார் தேச உணர்வு பற்றிய ஒருமை உணர்வை எழுப்பியதோடு "செந்தமிழ் நாடெனும் போதினிலே" எனப் பாடி தமிழருக்குத் தமிழ்நாட்டைப் பற்றிய உணர்வுக்கும் வழி வகுகிறார்.



Scanned with OKEN Scanner

தாய்நாட்டின் பெருமைமிகு பழமை வரலாற்றை மக்களுக்கு அறிவுறுத்துவதோடு அவர் நிகழ்கால உண்மைகளையும் சுட்டிக்காட்ட தவறவில்லை. நெஞ்சு பொறுக்குதில்லையே என தொடங்கும் கவிதையிலும் நடிப்பு சுதேசிகள் என்ற கவிதையிலும் நாட்டின் அவல நிலையை மறவாது குறிப்பிட்டு செல்கிறார். அவர் பாரத நாடு தமிழ்நாடு என்ற வகையில் தம் அன்புணர்வை வெளிப்படுத்தும் பாடல்கள் பாடினாலும் பாரத நாட்டின் பகுதிகள் யாவும் ஒருமைப்பட்டு மாறுபட சிந்தனையுடன் செயல்பட வேண்டும் என்று விரும்புகின்றார். மேலும் நாட்டின் தேவையை உணர்ந்தவராய்

**"சிந்துநதியின் மிசை நிலவினிலே**
**சேர நன்னாட்டிளம் பெண்களுடனே**
**சுந்தர தெலுங்கினில் பாட்டிசைத்துத்**
**தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்"**
**(பாரத தேசம் 1-8)**

என்று பாடுகிறார்.

பாரதியார் இந்திய நாடு தமிழ்நாடு என்ற வகையில் மாணிடம் போற்றுவது போன்று பாரதிதாசனும் திராவிட நாடு தமிழ்நாடு என்ற வகையில் மாறுபட்ட பற்றுடன் இருந்ததைக் காண முடிகிறது.

**"கேரளந் தெலுங்கு துளு கன்னடம்**
**முறு தாயகமே வாழி"**

என்று இவர் கவிதை பாடுவார். திராவிட நாட்டிலும் தமிழ்நாடு இவரின் கவிதைகளின் பெரும் பகுதியை ஆட்சி புரிகிறது.

**"தமிழ்நாடு தான் மேலான நாடு தமிழர்க்கெல்லாம்**
**மற்றவை காடு" (நெஞ்சும் பேசும்)**

என்று இவர் பாடுகிறார்.

**"அயல் என்று கொட்டு முரசே- உற**
**வான திராவிடர் அல்லார்" (தமிழர் முரசு)**

என்று திராவிட மக்களை தம் உறவினர் என்று பாரதிதாசன் பாடுகின்றார்.

**"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை**
**தாய் தடுத்தாலும் விடேன்"**

என்று தமிழருக்காக தனிக்கவிதைகள் பல புனைந்துள்ளார்.

பாரதிதாசனின் தமிழ்ப்பற்று அளவிட முடியாதது. தமிழருக்காகவே பல தனிக்கவிதைகள் பாடியுள்ளார்.

**"செந்தமிழே உயிரே நறுந்தேனே செயலினை**
**மூச்சினை உனக்களித்தேனே" (தமிழ்)**
**"கண்ணும் ஒளியும் போலே எனது கண்ணன்**
**தமிழும் நானும் அல்லவோ" (தமிழ்)**

என்று உணர்வு பூர்வமாக மனிதாபிமானத்துடன் கவிதைகள் பாடித் தமிழரோடு உறவு கொள்கிறார்.

கவிஞர் முடியரசன் பாரதிதாசனைப் போன்றே தமிழ்நாடு தமிழர்கள் என்ற அன்பில் திளைத்து கவிதை பாடக்கூடியவர். கண்ணனைப் பல்வேறு உறவு நிலைகளில் கண்டு மகிழ்ந்த பாரதியாரைப் போல இவர் "தமிழ் என் தாய்" "தமிழ் என் தந்தை" என்பதாக தமிழை பல்வேறு நிலையில் உறவு வைத்து கவிதை பாடுகின்றார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத் திடமும் இத்தகைய கவிதைகள் உருவாகின்றன.

**"நாங்கள் பிறந்த தமிழ்நாடு- இது**
**நூறு மொழிகளின் தாய்வீடு" (எங்கள் நாடு)**
**"மதுரத் தமிழ் வழிந்து உதிரத்தோடு கலந்து**
**மனதில் துணிவு கொண்டு வாழ்ந்தவர்"**
**(எங்கள் நாடு)**

என்பதாக இவர் நாடு, மொழி பற்றி மாறுபட்டதுடன் பாடல் பாடுகின்றார். தாய் நாட்டு உணர்வு தாய் மொழி உணர்வு என்பதை இன்றைய மாறுபட்ட கொள்கைகள் தற்கால மரபுக் கவிதைகளில் பயிலப்படுவதை காண முடிகின்றது.

## சாதி மற்றும் சமயம்

சமுதாயத்தில் சாதித் தீமை அழுத்தமாக பரவி கிடந்தாலும் தற்கால கவிஞர் அனைவரும் நம்பிக்கையுடன் சாதி, சமய வேறுபாடு கூடாது என்று தொடர்ந்து பாடி வருகின்றனர்.

**"சாதி மதங்களைப் பாரோம்-உயர் ஜன்மம்**
**இத்தேசத்தில் எய்தினராயின்" (வந்தே மாதரம்)**

என்றும்

**"சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே**
**தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தமென்போம்"**
**(பாரத தேசம்)**

என்றும் பாரதியார் சாதி மறுப்பு பற்றி பாடல் பாடுகின்றார்.

புறாக்களின் அழகைப் பாடவரும் பாரதிதாசன்

**"வட்டமாய்ப் புறாக்கள் கூடி இரையுண்ணும்**
**அவற்றின் வாழ்வில்**
**வெட்டிலை குத்துமில்லை**
**வேறுவேறிருந்தும் கட்டில்லை கீழ் மேல்**
**என்னும்**
**கண்மூடி வழக்கமில்லை"**

**(அழகின் சிரிப்பு: புறாக்கள்)**

என்று சாதித் தீமையை குறித்து சொல்கிறார். மனிதர்கள் மட்டும் நிறத்தாலும் தொழிலாலும் பாகுபாடு இருப்பதை குறித்து அவர் வருந்துகின்றார்.

**"துகளிலா நெஞ்சில் - சாதி**
**துளிப்பதும் இல்லை- சமய**
**புகைச்சலும் இல்லை"**

**(இசையமுது- தாய்மை)**

என்று சமய வேறுபாடு கூடாது என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார். காளியிடமும் கண்ணனிடமும் மிகுந்த அன்பு கொண்ட பாரதியாரும் சமய பொது உணர்வோடு இயேசு கிறிஸ்துவுக்கும் அல்லாவுக்கும் பாடல்கள் புனைந்திருப்பதை நாம் அறிகிறோம். ஆகவே தற்கால தமிழ் கவிதை துறையில் சாதி சமய காழ்ப்பு கூடாது என்ற கருத்து பரவலாக காணப்படுவது தெளிவாகின்றது.

**"ஓடும் உதிரத்தில் -வடிந்து ஒழுகும் கண்ணீரில்**
**தேடிப் பார்த்தாலும்-சாதி தெரிவதுண்டோ**
**அப்பா**
**எவர் உடம்பிலும்-சிவப்பே**
**இரத்த நிறமப்பா**
**எவர் விழிநீர்க்கும்-உவர்ப்பே**
**இயற்கைக் குணமப்பா நெற்றியில் நீறும் மார்பில்**
**நீண்ட பூணூலும்**
**பெற்று இவ் உலகுதனில்-எவரும்**
**பிறந்ததுண்டோ அப்பா?**

**(ஆசிய ஜோதி: புத்தரும் ஏழைச் சிறுவனும்)**

என்று கவிமணி கூறும் கருத்து பழங்காலத்தில் புத்தர் ஆட்டிடையனுக்குக் கூறுவதாக அமைந்தாலும் அது நிகழ்கால சமுதாயத்திற்கும் பொருந்துவதாகவே இருக்கிறது. ஜாதிய பாகுபாடு இன்னும் மானிட சமுதாயத்தில் குறைவில்லாமல் இருந்து கொண்டிருப்பதை வருத்தத்துடன் வெளிப்படுத்துகின்றார்.

சாதித் தீமை இன்னும் நீங்கவில்லையே என்ற வருத்தத்தில்

**"வீதிகள் எங்கணும் என் புகழே- பாடி**
**வெற்றி முழக்கிடும் மானிடரே சாதிகள்**
**இன்னும் தொலைத்திரோ- பொய்மைச்**
**சாத்திரம் ஏதும் விடுத்திரோ?"**

**(பாரதியின் குரல்)**

என்று பாரதியார் பாடுவதாக முடியரசன் பாடுகிறார்.

**"ஊருக்கெல்லாம் ஒரே சாமி**
**ஒரே சாமி ஒரே நீதி**
**ஒரே நீதி ஒரே ஜாதி**
**தேவடி கண்ணாத்தா"**

**(ஊருக்கெல்லாம் ஒரே சாமி)**

என்ற உலகுக்கே ஒரே ஜாதி ஒரே சமயம் போதாதா என்ற வலியுறுத்துகிறார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார். கல்வியறிவு பெருகிவரும் நாட்டில் சாதியும் சமயமும் மதிப்பிழக்கும் சமுதாய சூழலை இக்கவிதைகளில் உருவாகின்றனர்.

**அரசியலும் இலக்கியமும்**

அரசியல் இலக்கியத்திலும் மானுட சிந்தனையை அதிகமாக காணமுடிகிறது.

அரசியலும் இலக்கியமும் ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பது வரலாற்றில் தொடர்ந்து வரும் ஒரு நிகழ்வாகும். 20 ஆம் நூற்றாண்டு இலக்கியமும் இதற்கு விதிவிலக்கன்று ஆயினும் தற்கால அரசியல் என்பது பல கட்சிகளின் அமைப்புகளைக் கொண்டது என்பதால் தற்கால இலக்கிய படைப்பாளரும் தத்தம் கொள்கைகளை பரப்பும் வழிமுறையாக கவிதைகளை படைக்கின்றனர். பக்தியால் இலக்கியமும் இலக்கியத்தால் பக்தியும் செழித்து விளங்கியதை வரலாறு உணர்த்துகின்றது. அதுபோலவே இன்று அரசியல் கட்சியும் இலக்கியமும் என்பது ஒரு இணைப்பாக காட்சியளிக்க கூடியதாக இருக்கிறது. இந்திய விடுதலையை நோக்கிய கவிஞர் என்ற முறையில் பாரதியார் அதற்கேற்ற கவிதைகளைப் புனைந்துள்ளார். விடுதலைக்குப் பின் அரசியலில் வடக்கு தெற்கு இருவகை கொள்கை ஏற்பட்ட நிலையிலும் பாரதிதாசன் முடியரசன் போன்றோர் திராவிட கட்சி என்ற அமைப்பினை சார்ந்து அதற்கேற்ற கவிதைகளைப் புனைந்துள்ளனர்.

அக்கவிதைகளைத் திராவிடர் ஏற்றம் தமிழர் பெருமை தமிழ் மொழியின் மேம்பாடு என்ற இத்தகைய கருத்துக்களையே மிகுதியும் காண முடிகின்றது. கண்ணதாசன் இத்தகைய மன நிலையில் இருந்த காலத்தில் உருவாக்கியது மாங்கனி என்ற கதை கவிதையாகும். 1954 ஆம் ஆண்டு அவர் இயற்றிய இன்னொரு பதிப்பு "வாழ்க தமிழ் வாழ்க திராவிடம்" என்று எழுதுகிறார். மாங்கனியும் காவியமும்

**"தென்மொழியும் தென்னாடும் தென்னவர் பண்பும்**
**செழித்துலகம் புகழ் பாட வாழி வாழி"**

என முடிகிறது.

மானுடம் போற்றும் பொதுவுடைமை கட்சியின் கொள்கைகளைப் பரப்ப வந்தவராக பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரனார் திகழ்கிறார். இவர் திரைப்படங்களைவழியே தனது கவிதைகளை நாட்டிற்கு அறிமுகப்படுத்துகிறார். மக்கள் வறுமை, சமநிலை சமுதாயம், புரட்சி ஆகியவை இவர் கவிதைகளின் மையக்கருத்தாக விளங்குகின்றன.

**"கத்தும் பறவை தனி மரத்தில் வந்து**
**ஒற்றுமை காட்டிடுதே- தனைப்**
**பித்தம் பிடித்தொரு கூட்டம் தனித்தனி**
**பேதம் வளர்த்திடுதே**
**ரத்த வியர்வைகள் சொட்ட உழைத்தவன்**
**நெற்றி சுருங்கிடுதே- ஏழை**
**உத்தமர் வாழ்வை உறிஞ்சும் உலுத்தரின்**
**கொட்டம்- அடங்கிடுதே மக்கள்**
**வெற்றி நெருங்கிடுதே"**

**(புது ஞாயிறு)**

**"குனிந்தாரிகள் மக்களெல்லாம் குறும்ப போரிக்**
**கொழுந்து விட்டுப்பற்றியது செந்தீ பெருகும்"**

**(புதிய ஒளி வீசுது பார்)**

**"பொறுமை ஒருநாள் பொங்கி எழுந்தால்**
**பூமி நடுங்குமடா"**

**(பூமி நடுங்குமடா)**

என்றும் கவிதை அடிகள் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் மானுடக் கொள்கையினை எடுத்துக்காட்டுகின்றது. சில சான்றுகளைக் கொண்டே தற்கால மரபுக் கவிதை துறை அரியதுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள இடம் விளங்குகின்றது.

**தொழில் வழி மானுடம்**

அறிவியல் தாக்கம் மிகுந்த ஒரு குடியரசு நாட்டில் தொழில்களை போற்றுதல் என்ற மரபு உருவாகுவது இயல்பானதாகும். தற்கால தமிழ் கவிதைத் துறையில் பல்வேறு தொழில்கள் செய்வதற்கு பாடல் புனைதல் என்ற பழக்கம் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

**"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்"**
**"குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்"** **(தே.கீ.5)**

என பாரதியார் தொழில் பல செய்து முன்னேற வேண்டிய தேவையை உணர்த்துகின்றார். தொழில் செய்தால் தான் மானுடம் முன்னேற முடியும் என்பதனையும் வலியுறுத்தி நிற்கின்றனர். காதல் தொடர்பான கவிதைகள் என்றாலும் பாரதிதாசனின் இசையமுது தொகுப்பில் உள்ள வண்டிக்காரன், மாடு மேய்ப்பவன், தறி தொழிலாளி, உழவன், உழத்தி, ஆலைத் தொழிலாளி, கோடாலிக்காரன், கூடை முறம் கட்டுவோர், பூக்காரி, குறவர், தபால்காரன் போன்ற கவிதைகள் பல்வேறு தொழில் செய்வோரை நினைத்து பாடியவை என்பதை மறுப்பதற்கில்லை.

**"செய்யும் தொழிலே தெய்வம்- அந்தத்**
**திறமை தான் நமது செல்வம்"**

என்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல் தொழிலைத் தெய்வமாக காட்டும் சாயா விற்பவன், உழவன், வண்டிக்காரன் இவர்கள் பாடுவதாக இவருடைய கவிதைகள் சில அமைகின்றன. தொழில் செய்வோரின் சிறப்பு கூறும் இக்கவிதை மரபில் முடியரசனின் அத்தர் விற்பனை பற்றிய கவிதை தனித்தன்மை வாய்ந்தது.

**"அத்தர் விற்று வருவோனின் தொல்லை அப்பப்பா**
**அவன் கையில் அகப்பட்டோர் தப்பிடுவதில்லை"**
**"பூவைது நம்மூடலில் ஒன்று- பின்ன**
**போத்தலில் அடைத்து கொடுப்பது மற்றொன்று"**

என்று தொழில் துறையில் சிலர் ஏமாற்றுவதையும் குறிப்பிட விரும்பிய கவிஞர் ஒரு சமகால செய்திதை அதன் நடப்பில் தன்மையோடு விளக்குகின்றார்.

போலீஸ்காரர், வித்தைகாரர், பால்காரர் என்று அழ.வள்ளியப்பா தொழில் செய்வோரைச் சிறுவருக்கு அறிமுகப்படுத்தி சிறப்பிக்கின்றார். பால்காரரே என்ற கவிதை முடியரசனின் அத்தர் விற்ப்போன் கவிதை போன்றது. ஆகவே பல்வேறு தொழில் செய்வோரைப் பற்றியும் கவிதை புனைதல் என்பது தற்கால கவிதை துறையின் ஒரு மரபாகத் தெரிகிறது. சமுதாயத்தில் உயரிடம் பெற்றோருக்கே இலக்கியம் அமையும் என்ற பழைய பழக்கத்திலிருந்து தற்கால கவிதை துறை மாறி வருவதற்கு இத்தன்மை ஒரு குறிப்பிடத்தக்க சான்றாகும். அனைத்து தொழிலை செய்யக்கூடியவர்களும் மானுடம் போற்றும் இலக்கியங்களை படைப்பதில் சிறப்புற்று விளங்குகின்றனர்.

## மானுடநோக்கில் பெண்ணுரிமை

"கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்"
(பெண் விடுதலை கும்மி: 9-10)

என்னும் கவிதை இந்திய நாட்டு வரலாற்றிலேயே ஆடவர்க்கு இணையாக பெண்களை மதிக்கத் தொடங்கிய நல்லதொரு காலத்தின் சார்பாக மலர்ந்ததாகும். அச்சம், மடம், நாணம், கற்பு சில நேரங்களில் வீரம் என்பதாக பண்பு அடிப்படை ஒன்றில் பெண்களைப் போற்றிக் கொண்டிருந்த இலக்கிய மரபிலிருந்து மாறி தற்கால கவிதைகள் சமுதாயத்தின் ஒவ்வொரு துறையிலும் பெண்கள் முன்னேற வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றது. பிற நாட்டார் தொடர்பு, கல்வி, அறிவு இவை சமுதாயத்தின் மாற்றத்திற்கான காரணங்களாக அமைகின்றன.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை
கொளுத்துவோம்" (விடுதலை 3)

என்பது பாரதியின் கூற்றாகும்.

"பெண்களால் முன்னேறக்கூடும்- நம்
வண் தமிழ் நாடும் எந் நாடும்
பெற்றநல் தந்தை தாய்மாரே- நம்
பெண்களை கற்க வைப்பீரே!
இன்றைய நாள் பெண் கல்வியாலே- முன்
னேற வேண்டும் வையமேலே"
(பெண்கல்வி)

என்பது பாரதிதாசன் பெற்றோரிடம் கேட்கும் வேண்டுகோள் ஆகும். தற்கால கவிதை துறையில் பெண்ணுரிமை பற்றிய மானுட சிந்தனைக் கருத்துக்களை பரவலாக காண முடிகின்றது.

## இலக்கியத்தில் பெரியோர்

தற்காலத்தில் பெரியோரை கவனிக்காத ஒரு சூழல் ஏற்பட்டு வருகிறது. பெரியவர்களாகிய மூத்த குடிமக்களை எவ்வாறு போற்றுவது என்பதை பற்றி தற்கால மரபுக் கவிதைகள் பாடியுள்ளன. தற்கால மரபு கவிதைகளுள் பெரியோரை பாடுதல் என்பது ஒரு வழக்கமாக தொடங்கி பின்பு அது பெரும் அளவு பரவி பலருக்கும் பாடலுடன் இசைப்பதிவு செய்வது வரை வளர்ந்திருப்பதைக் காணமுடிகிறது. சமகாலப் பெரியோருக்கும் முன் வாழ்ந்து மறைந்த சான்றோருக்கும் தனிக் கவிதைகள் பாடுதல் என்றொரு பழக்கத்தை மகாகவி பாரதியாரே பரவலான முறையில் தொடங்கினார் எனலாம். சங்க இலக்கியத்திலேயே ஒரு புலவர் மற்றொரு புலவரை புகழ்தல் என்றொரு பழக்கம் தொடங்கி இருப்பது உண்மை. ஆயினும் ஒரு கவிதையின் ஓர் இடத்தில் சுட்டிக்காட்டப்படும் கருத்தாக அது விளங்கியது. பாரதியாரோ தான் மதித்த சான்றோர் பலருக்கும் தனித்தனி கவிதைகள் புனைந்து மகிழ்ந்தார். சிவாஜி, கோக்கலே, சிதம்பரம் பிள்ளை, காந்தியடிகள், திலகர், தாதாபாய் நவுரோஜி, லாலா லஜபதி ராய், நிவேதிதா போன்ற பெரியோர் பலரை பாரதியார் வாழ்த்தக் காண்கிறோம். தாம் வாழ்ந்த சமுதாயத்திற்கு சிறந்த வாழ்வு தர முனைந்த பெரியோருக்கு பாரதியார் செலுத்திய நன்றி கடனாகப் பாடல்கள் அமைந்துள்ளன. கவிமணியின் ஆசிய ஜோதியும் பெரியோரை வாழ்த்தும் மரபில் பிறந்த ஒரு நூலாகும். உமர்கய்யாம் பாடல்களை அவர் தமிழ் படுத்தியதற்கும் கவிஞரிடம் அவர் கொண்ட ஈடுபாடு காரணமாக அமைந்தது. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாரதி பாடலும் இந்த மரபில் வந்ததுதான். புதிய ஒளி வீசுது பார் என்ற கவிதையில் லெனின், ஸ்டாலின் இவர்களை புகழ்கிறார். உழைப்பும் தேவை என்ற கவிதையில் நெப்போலியன், ஸ்டாலின், ஜீடி நாயுடு. சர்.சி.வி. ராமன் இவர்களை எல்லாம்

தொழிலில் சிறந்த உயர்ந்தோர் என்று பாராட்டுகிறார். முடியரசன், வள்ளலார், பாரதியார் இவர்களுக்குக் கவிதை பாடுகின்றார். குழந்தைகளுக்கான பாடல்களிலும் இம்மரபு சிறப்பை அழ. வள்ளியப்பாவின் காந்தி சொல், கவிமணி தாத்தா, எங்கள் நேருஜி, முப்பெரும் புலவர் போன்ற கவிதைகள் உணர்த்துகின்றன.

## மானுடம் போற்றும் குழந்தை இலக்கியம்

தற்கால கவித் துறையில் குழந்தைகளுக்குரிய படைப்பு ஒரு குறிப்பிடத் தக்க வளர்ச்சி ஆகும். பெரியோரையும் தெய்வங்களையும் குழந்தைகளாக பாடுதல் என்றொரு மரபையும் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் நாம் காண்கின்றோம். ஆயினும் சமுதாய வளர்ச்சியில் பெரும் பங்கேற்க இருக்கும் குழந்தைகளுக்கு என்று தனி இலக்கியம் உருவாக்க வேண்டிய தேவையைத் தற்கால கவிதைத்துறை உணர்ந்து இருக்கிறது. குழந்தை இலக்கியத்துறை இருபதாம் நூற்றாண்டிலேயே சிறந்து வளர்ந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பாரதியின் ஓடி விளையாடு பாப்பா என்ற கவிதையும் கவிமணியின் தோட்டத்தில் மேயுது வெள்ளை பசு என்ற கவிதை குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு அடித்தளமாய் அமைந்தன. இவ்விரு பாடல்களுமே தன் கருத்தைக் கவர்ந்த குழந்தைகளுக்காகத் தனியே கவிதைகள் அமைக்க தூண்டின என்பார் குழந்தை கவிஞரான அழ. வள்ளியப்பா. குழந்தைகளுக்கு மானுட சிந்தனைகளைப் பரப்புவது இலக்கிய வாதிகளின் முக்கிய நோக்கமாக இருந்தது.

"ஏடு தூக்கி பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்"

(அழ.வள்ளியப்பா)

என்ற உண்மையை உணர்ந்த தற்கால கவிஞர் குழந்தைகளை எண்ணிப் பல பாடல்களைப் புனைந்து நாட்டிற்கு நல்லதொரு தொண்டினைச் செய்கின்றனர்.

"இன்று குழந்தைகள் நீங்கள்- எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்"

(சிறார் பொறுப்பு)

என்று குழந்தைகளின் பொறுப்பை உணர்த்துகின்றார் பாரதிதாசன்.

"பசி என்று வந்தால் ஒரு பிடி சோறு
புசி என்று தந்து பார் அப்பா"
"தாய்மை சேடா தம்பி"
"அன்பை வளர்த்திடுவோம்"
"மெய்ச் சொல்லல் நல்லதப்பா"
"பொறுமை தான் உன்றன் உடைமை"

(இசையமுது சிறுவர் பகுதி)

என்ற வகையில் குழந்தைகளுக்கு பல அறிவுரைகள் சொல்கிறார். நிலா, சிட்டு, காக்கை, நாய், பூனை என்ற கவிதைகளில் சிறுவர்களுக்கு இயற்கையை அறிமுகப்படுத்துகிறார். புகைச் சுருட்டும் காப்பியம் தீமை செய்யும் என்று பரிவோடு கூறுகிறார். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் குழந்தைகளுக்கான சில கவிதைகளை தமிழிலக்கியத்திற்கு கிடைத்த சொத்து என்று குறிப்பிட்டாலும் பிழை ஆகாது. ஆளும் வளராது அறிவும் வளராது தன்மானமின்றி கோழைகளாய் பயந்து திரியும் சின்னஞ்சிறு வரை பார்த்து கவிஞரின் மனம் ஒன்றிய நிலைமையில் உதித்த உணர்வு பூர்வமான கவிதை சின்ன பயலே சின்னப்பயலே சேதி கேளடா என்பது ஆகும். வீட்டுக்குள் படுத்ததோடு இருந்து விடாதே என்ற கவிதை சிறுவருக்கு சிறந்த அறிவுரைகள் தருகின்றது.

"சூடத்தினங்கள் போக்கிடல் வேண்டும்
அருமைத் தமிழ்மொழி பயின்றிடுபாப்பா"

(பாப்பா பாட்டு)

என்பது முடியரசன் பாப்பாவுக்கு கூறும் அறிவுரைகள் ஆகும். குழந்தைகளுக்கு பாடுதல் என்ற இந்த இலக்கிய மரபில் குழந்தை கவிஞர் என்ற சிறப்பு பெயர் பெற்ற அழ. வள்ளியப்பா தன்னிகரற்று சிறந்து விளங்குகிறார். பல்வேறு செடிகள் மரங்கள் காய்கள் கனிகள் பறவைகள் விலங்குகள் பற்றி இயற்கையோடு குழந்தைகளுக்கு உள்ள தொடர்பையும் மனிதாபிமானத்தையும் அறிமுகப்படுத்து கின்றார். இவருடைய வானவில் காற்று மழை பிறைச் சந்திரன் இவை பற்றி இனிமையான விளக்கங்கள் சிறுவருக்கு இயற்கையில் ஈடுபாட்டினை உருவாக்க உதவுகின்றது. பல்வேறு வகையான வாகனங்களை வகை வகையாக இவர் கவிதைகளாக விளக்குகின்றார்.

பாம்பாம் வண்டி, கருப்பு வண்டி என்று குழந்தைகளின் மொழி நடையிலேயே சில கவிதைகள் அமையும். பறவை கப்பல் என்ற வான ஊர்தியை அழைக்கின்றார். கப்பல் பயணம் அனுபவத்தை குழந்தைகளுக்கு ஏற்படுத்துகின்றார். தீபாவளி சுதந்திரத் திருநாள் கார்த்திகை தீபம் போன்ற விழாக்களை பற்றி குழந்தைகளுக்கு விளக்குகிறார். மொத்தத்தில் இவர் கவிதைகள் சிறுவர்களுக்கு உலக அறிவு தரும் வழிகாட்டுதலாக அமைகின்றன. அதோடு குடும்ப உறவில் பாசத்தை ஏற்படுத்தக்கூடிய பாடல்கள் பல இயற்றியுள்ளார். எங்கள் அப்பா , நான் குழந்தை ஆனால் போன்ற கவிதைகள் வகையில் அடங்கும்.

**"ஆண்டுதோறும் தேடுவேன்**
**அறிஞனாக மாறுவேன்**
**அறிஞனாக மாறுவேன்**
**அனைவருக்கும் உதவுவேன்"**

**(பள்ளிக்கூடப்பையன்)**

என்ற கவிதையில் குழந்தைகளுக்கு உழைப்பு அறிவு அன்பு ஆகிய பண்புகள் வலியுறுத்தப்படுவதை காணலாம். இவ்வகையில் அழ. வள்ளியப்பாவின் கவிதைகள் தற்கால கவிதைகள் துறையின் ஒரு பிரிவாய் வளரும் குழந்தை இலக்கியத் துறையில் சிறப்பிடம் பெறுகின்றது. உளவியல் அறிவின் தாக்கமே இந்த எழுத்தாளர்களை குழந்தைகளைப் பற்றி சிந்திக்க செய்யக்கூடியதாக அமைகிறது.

**முடிவுரை**

தற்கால மரபுக் கவிதைகளில் இவ்வாறு சில இயல்புகள் தொடங்கியிருப்பதற்கு காரணம் சமுதாய அமைப்பு மற்றும் அதனுடைய சிந்தனையாகும் சமகால சமுதாய செய்திகளுடன் மானிடச் செய்தியை கலப்பதை காண முடிகிறது. படைப்பாளனுக்கு தனது கருத்தைத் தெரிவிப்பதற்கு ஒரு வழிமுறை வேண்டும். இலக்கியத்தில் தான் நினைத்த மானுடம் மேன்மையடைய எண்ணிய கருத்துக்களை மிக சரியான முறையில் வெளிப்படுத்துகின்றான். மானுட சமுதாயத்தில் உடனடி மாற்றம் தேவைப்படும் போது மக்களுக்குப் பயன்படும் விதத்தில் கவிதைகளைப் படைக்கின்றனர்.

**துணை நூற்பட்டியல்**


1. சி.சு.செல்லப்பா, தமிழில் இலக்கிய விமர்சனம், எழுத்து பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை - 5
2. பாரதியார் கவிதைகள், வானவில் பிரசுரம், 13 கிராண் தெரு, சென்னை-35
3. பாரதிதாசன் கவிதைகள், பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம், சென்னை.

ERIC
Advanced Science Index
ERIHPLUS
Modern Language Association
J-Gate
RePEc
SSRN
ISSN International Standard Serial Number
Google
Crossref
ResearchGate
ULRICHSWEB
Academia.edu
Open Access
OJS
ICI
zenodo
doi
PKP
WorldCat

SHANLAX Journals

SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES
66, TPK Main Road, Vasantha Nagar
Madurai – 625 003. Tamil Nadu, India
Office: +91 452 4208765 | Mobile: +91 90 4330 3383
Email: editor@shanlaxjournals.com | Web: www.shanlaxjournals.com

Scanned with OKEN Scanner